**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09032025-8595

Volume: 9

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 28.10.2024

Accepted: 15.12.2024

Published: 01.01.2025

Citation:
Murugesapandian, N. “A Rereading of Manimekalai.” *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 3, 2025, pp. 1–10.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i3.8595

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# A Rereading of Manimekalai

**N. Murugesapandian**

*http://orcid.org/0000-0002-1831-7730*

**Abstract**

*Shathanar's Buddhist propaganda purpose is embodied in Manimekalai epic's excessive natural events and supernatural legends. The effort of religions to suppress the human senses that wash the human body has been emphasized in the Buddhist tradition. In the face of increasing inequality among people, Manimekali narrative has tried to subtly do the work of justifying existence. The emphasis on morals and ethics on religious grounds shows that the power of the rulers of the day was strengthened. The Manimekala epic was created to justify all kinds of oppression when Buddhism merged with state power.*

***Keywords:*** *Manimekalai, Seethalai Shathanar, Epic, Aimperung Kappiyam, Criticism, Buddhism, Rereading.*

**References**

1. Puliurgesikan. Manimekalai. Chennai: Gowra Publishing House, 2019.

# மறுவாசிப்பில் மணிமேகலை

*ந. முருகேசபாண்டியன்*

***ஆய்வுச் சுருக்கம்***

*மணிமேகலை காப்பியத்தில் அளவுக்கதிகமான இயற்கையிறந்த சம்பவங்கள், அதியற்புதப் புனைவுகள் இடம் பெற்றுள்ளதில் சாத்தனாரின் பௌத்த சமயப் பிரச்சார நோக்கம் பொதிந்துள்ளது. மனித உடல்கள் துய்க்கும் புலனின்பங்களை ஒடுக்குவதற்கு முயலும் மதங்களின் முயற்சி காப்பியப் போக்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது. மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் பெருகிய நிலையில், இருப்பினை நியாயப்படுத்தும் பணியினை நுட்பமாகச் செய்திட மணிமேகலை கதையாடல் முயன்றுள்ளது. மத அடிப்படையில் ஒழுக்கவிதிகளும் நெறிகளும் வலியுறுத்தப்படுவது, அன்றைய ஆட்சியாளர்களின் அதிகாரம் வலுவடைந்ததைக் காட்டுகின்றது. பௌத்த சமயமானது அரச அதிகாரத்துடன் ஒருங்கிணையும்போது எல்லாவிதமான ஒடுக்குமுறைகளையும் நியாயப்படுத்தும் வகையில் மணிமேகலை காப்பியம் படைக்கப்பட்டுள்ளது.*

***முக்கியச் சொற்கள்:*** *மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார், காப்பியம், ஐம்பெருங் காப்பியம், திறனாய்வு, பௌத்த சமயம், மறுவாசிப்பு.*

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை தமிழ் மறுமலர்ச்சியின் அடையாளமாகக் கருதப்படுகிறது. கணிகையர் குலத்தில் பிறந்த மணிமேகலை என்ற இளம்பெண் எதிர்கொண்ட சிக்கல்களும் அவற்றிலிருந்து மீண்டு அவள் துறவியாவதும் தான் காப்பியத்தின் மையக்கதை. மணிமேகலை என்ற பிரதி குறித்துக் காலந்தோறும் உருவாக்கப்பட்டுள்ள கருத்தாடல்களின் வழியே மறுவாசிப்பைத் தொடங்க வேண்டும். சாத்தானாரின் படைப்பு நோக்கத்தை மீறி வரலாற்றுப் பழமையான மணிமேகலையின் சமகால மதிப்பீடுகளைக் கண்டறிய வேண்டியுள்ளது. அப்பொழுது தான் அக்காப்பியம் சமகாலத்துடன் ஒத்திசையும் போக்கினை அடையாளப்படுத்த முடியும்.

இனக்குழுக்களின் தனித்துவமான அடையாளங்கள் சிதைந்து, பெரிய அரசுகள் உருவெடுப்பதற்கான சூழல் சங்ககாலத்தின் பிற்பகுதியில் வலுவடைந்தது. புறத்தில் நிலத்தைத் துய்ப்பதும் அகத்தில் பெண்ணுடலைத் துய்ப்பதும் ஆணுக்கான வாழ்நிலையாயின. 'தமிழ்' என்ற அடையாளத்துடன் நிலப்பரப்பின் விரிவாக்கத்தைத் துரிதப்படுத்த பாணர்கள், விறலியர்கள், புலவர்கள் பெரிதும் முயன்றனர். குடிப்பெருமை முன்னிறுத்தப்பட்ட சங்கமரபில் அரசு உருவாக்கம் ஏற்பட்டதுடன் மூவேந்தர் ஆட்சி என்ற கருத்தியல் பரவலானது. தமிழகத்தில் ஏற்கனவே நிலவிய தொல் சமய வழிபாடுகளும் பரவலாயின. ஔவையாரின் நாடா கொன்றோ அவலா கொன்றோ புறநானூற்றுப் பாடல் புத்தரின் தம்மபதம் நூலில் இடம் பெற்றுள்ள அறக்கருத்தின் தழுவல் என்பது ஒப்பு நோக்கத்தக்கது. வடக்கிலிருந்து தமிழகம் வந்த ஜைன, புத்த துறவியர் தமிழுக்கு முன்னுரிமை தந்தனர். பாலி, பிராகிருதம், சம்ஸ்கிருத மொழிகளில் எழுதப்பட்டிருந்த காப்பியங்களைத் தமிழாக்குவது பெரிதும் நடைபெற்றது. சிலப்பதிகாரம், மணிமேகலை தவிர பிற பண்டைக் காப்பியங்கள் தழுவல்களே. மணிமேகலை, சித்திராபதி, மாதவி ஆகிய மூவரைத் தவிர்த்துவிட்டு

கதைப்போக்கினை ஆராய்ந்திடும்போது, அக்காப்பியத்தின் தனித்தன்மை கேள்விக்குள்ளாகிறது.

பல்வேறு குறுநில மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்த சங்ககாலச் சமூகம் பற்றிய பதிவுகள் காப்பிய காலத்தில் இல்லை. சிலம்பிலும் மேகலையிலும் குறுநில மன்னர்கள் பற்றி மௌனம் நிலவுகிறது. மூவேந்தரை முன்னிலைப்படுத்த வேண்டிய அரசியல் பற்றிக் கேள்வி தோன்றுகிறது. வெளியிலிருந்து மதப்பிரசாரம் செய்ய தமிழகத்திற்கு நுழையும் துறவியருக்குப் பெரிய அரசு தேவைப்படுகிறது. ஏனெனில் குடிப்பெருமையும் மரபினையும் போற்றும் குறுநில மன்னர்கள் தடையாக விளங்கிட வாய்ப்புண்டு.

சங்கத் தமிழரின் வாழ்க்கை திணை சார்ந்த நிலையில் இயற்கையோடு இயைந்திருத்தது. காதலும் போரும் ஒருவகையில் கொண்டாட்டங்கள். கள் குடித்தல், புலால் உண்ணுதல், பரத்தமை இயல்பாகக் கருதப்பட்டன. வீட்டிற்கு வரும் விருந்தினருக்குக் கள் வழங்கப்பட்டது. மகளிரும் கள் குடித்துக் கண் சிவந்திருந்தனர். ஒத்த கருத்தும் விருப்பமும் மிக்க இளைஞனும் இளைஞியும் திருமணத்திற்கு முன்னர் பாலுறவு வேட்கையினால் உடல்கள் துய்க்கும் இன்பத்தை முன்னிறுத்திய பேச்சுகள் பின்னர் அக இலக்கியமாக வடிவெடுத்தன. இனக்குழுக்களிடையே நடைபெற்ற மோதல்கள் வீரமெனப் போற்றப்பட்டதில் அரசியல் உண்டு. இத்தகைய போக்குகளுக்கு எதிரான நிலையை மணிமேகலை படைக்கப்பட்ட காப்பிய காலத்தில் காண முடிகின்றது. அன்றாட வாழ்க்கைப் போக்கில் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

மனித உடல்களை முன்னிறுத்திக் குதூகலத்துடன் கட்டமைக்கப்பட்ட சங்க கால வாழ்க்கை முழுக்கப் புறக்கணிக்கப்பட்ட நிலை, காப்பிய காலத்தில் ஏற்பட்ட முக்கிய மாற்றம். கள் குடித்தலும் புலால் உண்ணுவதும் கேவலமாகக் கருதப்பட்டன. உடல்கள் துய்க்கும் பாலியல் இன்பம் பற்றிய பேச்சு ஏதுமில்லை. மதுவும் காமமும் ஐவகைக் குற்றங்களுக்குள் இடம் பெற்றன. பரத்தமை பெரிய அளவில் வளர்ச்சி அடைந்ததோ என்று நினைக்கத் தோன்றுகிறது. எவ்வாறாயினும் பூமியில் மனித உடல்கள் துய்க்கும் புலனின்பங்களை ஒடுக்குவதற்கு முயலும் மதங்களின் முயற்சிதான் மணிமேகலை காப்பியத்தில் வெளிப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகக் கருதப்படும் மணிமேகலை காப்பியத்தில் அளவுக்கதிகமான இயற்கையிறந்த சம்பவங்கள், அதியற்புதப் புனைவுகள் இடம் பெற்றுள்ளதில் சமய நோக்கம் பொதிந்துள்ளது. அன்றாட வாழ்வில் ஒவ்வொரு மனிதரும் எதிர்கொள்ளும் சம்பவங்கள், முந்தைய பிறவியுடன் தொடர்புடையன எனக் காப்பியம் முழுக்க வலியுறுத்தப்படுவது சமயப்பிரச்சாரம்தான். ஒழுக்கவிதிகளும் நெறிகளும் வலியுறுத்தப்படுவது, அன்றைய ஆட்சியாளர்களின் அதிகாரம் வலுவடைந்ததைக் காட்டுகின்றது. மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் பெருகிய நிலையில், இருப்பினை நியாயப்படுத்தும் பணியினை நுட்பமாகச் செய்திட 'மணிமேகலை' தேவைப்பட்டுள்ளது. சமயமானது அரச அதிகாரத்துடன் ஒருங்கிணையும் போது எல்லாவிதமான ஒடுக்குமுறைகளையும் நியாயப்படுத்தும் இலக்கியம் படைக்கப்படுவது தற்செயலானது அல்ல.

ஒப்பீட்டளவில் பெண்ணுடல் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அளவற்றவை. வைதிக இந்து சமயம் தீட்டை முன்னிறுத்திப் பெண்ணுடலை இழிவுபடுத்தியது. ஜைன சமயம் பெண் அடுத்த பிறவியில் ஆணாகப் பிறந்து, அதற்கடுத்த பிறவியில் துறவியாகி அப்புறம் தான் முக்தி அடைய முடியும் எனப் போதித்தது. புத்த சமயம் பெண் துறவியாகி வீடுபேறு அடையலாம் என்பதை ஏற்றுக்கொண்டது. எனவேதான் மணிமேகலையைக் காப்பியத் தலைவியாக்க சாத்தனரால் முடிந்தது.

அன்றைய காலகட்டத்தில் கணிகையர் குலத்தில் பிறந்த எளிய பெண்ணுக்கு முன்னுரிமை தந்தது, ஒருவகையில் புரட்சி கரமானது. சமூக மதிப்பீட்டில் இழிவாகக் கருதப்படும் பரத்தை குலத்தில் பிறந்த பெண்ணாக இருப்பினும் புத்தரை வணங்கி, புத்த சமயக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டால் முக்தி அடையலாம் என்பதைக் குறிக்க வகைமாதிரியாக எழுதப்பட்ட காப்பியம் மணிமேகலை என்று கருத இடமுண்டு.

மணிமேகலையை மையமாகக்கொண்டு 30 காதைகளாக விரியும் காப்பியத்தில் பிற பாத்திரங்கள் சார்பு நிலையில் உள்ளன. உதயகுமாரன் மட்டும் விதிவிலக்கு. மூலக் கதைக்கு வலுச்சேர்க்கும் வகையில் 19 கிளைக் கதைகளும் 23 துணைக் கதைகளும் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. அவை அதியற்புதங்களின் தொகுப்பாக வாசகரை மாய உலகினுக்கு இட்டுச் செல்கின்றன. மணிமேகலா தெய்வம், தீவதிலகை, கந்திற்பாவை போன்ற தெய்வங்கள் அவ்வப்போது தோன்றி மணிமேகலை அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைப் போதிக்கின்றன. மணிமேகலைக்கு எப்பொழுதெல்லாம் பெண் என்ற நிலையில் இயற்கையாகப் பாலியல் வேட்கை தோன்றுகிறதோ, அப்பொழுதெல்லாம் அந்தத் தெய்வங்கள் அங்கு தோன்றி அவளுக்கு உடலின் நிலையாமையை அறிவுறுத்தித் துறவின் மேன்மையை எடுத்துரைக்கின்றன. முற்பிறப்பு பற்றிய கதைகள்மூலம் காப்பியப் போக்கு அமானுட தளத்திற்குள் நகர்கின்றது. நினைத்த உருவமாக மாறுதல், பசியைக் கட்டுப் படுத்துதல் ஆகிய இரு மந்திரங்களையும் மணிமேகலா தெய்வம் மணிமேகலைக் குச் சொல்லிக் கொடுக்கிறது. மானுடப் பெண்ணான மணிமேகலையை அதியற்புத ஆற்றல்மிக்கவளாக மாற்றுவது தெய்வங்கள் மூலமாக நடந்தேறுகிறது.

மாதவியின் அன்னையான சித்திராபதி, பேரழகியான மணிமேகலையைக் கணிகையராக வாழத் தொடர்ந்து நெருக்கடி தருகின்றாள். இளவரசனான உதயகுமாரனிடம் மணிமேகலை பற்றிய புனைவினை ஏற்படுத்திக் காதல் எண்ணத்தை ஏற்படுத்தும் சித்திராபதி, அவளது குல வழக்கப்படி நடக்க முயலுகின்றாள்.

**... .. .. வையை**
**ஆடவர் கண்டால், அகறலும் உண்டோ**
**பேடியர் அன்றோ, பெற்றியின் நின்றிடின்?**
**(மணிமேகலை, மலர்வனம் புக்கக் காதை, பா.வரி: 24-25)**

மணிமேகலையை ஆடவர் கண்டால் அவளை விட்டுப் பிரிவாரோ? அவள் அழகைக் கண்டும் விரும்பாது நின்றால் அவர் பெண் மூலம் கிடைக்கும் பாலியல் இன்பம் துய்க்கத் தகுதியற்ற பேடியர் அல்லவா? எனச் சாத்தனார் சித்திரிப்பது பாத்திரப்படைப்பில் நுட்பமானது. ஆடவர் எல்லாம் விரும்பும் கனவுக்கன்னி அல்லது தேவதை போன்ற மணிமேகலை எல்லாவற்றையும் துறந்து, புத்தரின் திருவடிகளை வணங்கித் துறவியாக மாறப் போகிறாள் என்பது முக்கியமான தகவல். பேரழகியின் உடல் பற்றிய புறக்கணிப்பு காப்பியம் முழுக்க விவரிக்கப்பட்டுள்ளது. உடல்களை முன்னிறுத்திச் சாத்தனார் புனைய விரும்புவது சமய நோக்கம் சார்ந்தது. மணிமேகலையின் மீதான காதலினால் அவளைத் தேடி உதயகுமாரன் மலர் வனம் வருகின்றான். அப்பொழுது பளிங்கறை மண்டபத்தில் மணிமேகலை ஒளிந்துகொள்ள, அவனது காமவேட்கையைத் தணிப்பதற்காகச் சுதமதி கூறும் உடல் பற்றிய கருத்துக்கள் முக்கியமானவை:

**வினையின் வந்தது; வினைக்கு விளைவு ஆயது**
**புனைவன நீங்கின், புலால் புறத்திடுவது**
**மூத்து விளிவு உடையது; தீப்பிணி இருக்கை**
**பற்றின் பற்றிடம்; குற்றக் கொள்கலம்**
**புற்று அடங்கு அரவின் செற்றச் சேக்கை**
**அவலம், கவலை, கையாறு, அழுங்கல்**
**தவலா உள்ளம் தன் பால் உடையது**
**மக்கள் யாக்கை இது என உணர்ந்து.**
**(மணிமேகலை, மலர்வனம் புக்கக் காதை, பா. வரி: 113-120)**

மனித உடல் நறுமணப் பொருட்கள் இல்லாவிடில் புலால் நாற்றமுடையது; முதுமைஅடைந்துசாகும்தன்மையுடையது. கொடிய நோய்களுக்கு இருப்பிடமாக உள்ளது.... அவலம், கவலை, கையறுநிலை, சினம், சீற்றம் ஆகியன நெஞ்சம் உடையது என்ற சுமதியின் கூற்று, உடலைப் பற்றி இழிவாகச் சித்தரிக்கின்றது.

'சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை'யில் சார்ங்கலன் என்னும் சிறுவன் தவறுதலாகச் சுடுகாட்டுக்குள் நுழைந்து விடுகிறான். அங்கே இளம் பெண்ணின் பிணத்திற்கு ஏற்படும் நிலை பற்றிய சாத்தனாரின் விவரிப்பு உள்நோக்கம் பொதிந்தது.

... ... ...

***வழுவொடு கிடந்து புழுஊன் பிண்டத்து அலத்தகம் ஊட்டிய அடிநரி வாய்க்கொண்டு***
***உவப்பஇல் இன்பமோடு உளைக்கும் ஓதையும்***
***கலைப்புற அல்குல் கழுகு குடைந்து உண்டு***
***நிலத்தலை நெடுவிளி எடுக்கும் ஓதையும்***
***கடகம் செறிந்த கையைத் தீநாய்***
***உடையக் கவ்வி ஓடுங்கா ஓதையும்***
***சாந்தம் தோய்ந்த ஏந்து இளவன முலை***
***காய்ந்தபசி பெருவை கவர்ந்து ஊண் ஓதையும்.....***

***(மணிமேகலை, சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை, பா.வரி: 109-117)***

புழுக்கள் மொய்க்கும் பெண்ணுடலின் செம்பஞ்சு தோய்ந்த கால்களை நரியொன்று வாயிலே கவ்விக்கொண்டு இன்பத்துடன் ஊளையிட்டது; அல்குலைக் கொத்திக் குடைந்து உண்ட கழுகு கூவியது; கடகம் அணிந்த கையைக் கவ்விக் கொண்டு நாய் குரைத்தது; இளமுலையைப் பருந்து ஓசையுடன் உண்டது. மேலும் பேய் ஒன்று பிணத்தின் கூந்தல் அடர்ந்த தலையை எடுத்துக்கொண்டு கூத்தாடியதுடன் கண்களைத் தோண்டி உண்டது என விவரணை நீள்கின்றது. அழகிய பெண்ணுடல் அடையும் சிதைவுகளைச் சாத்தனார் விவரித்திருப்பது வக்கிரத்தின் உச்சம் மட்டுமல்ல, உடல் நிலையில் பெண் பற்றிய இழிவான பிம்பத்தைக் கட்டமைப்பதும்தான்.

மணிமேகலைமீது கொண்ட காதலால் உதயகுமாரன் அவளைத் தொடர்ந்து சென்று தன் விருப்பத்தைத் தெரிவிக்க முயலுகிறான். அப்பொழுது காயசண்டிகை என்ற பெண்ணாக வடிவெடுத்த மணிமேகலை இளமையின் நிலையற்ற தன்மையைச் சுட்ட விரும்பியவள், தலைமுடி நரைத்த மூதாட்டியைக் காட்டிச் சொல்லும் சொற்கள் பெண்ணுடல் பற்றிய பதிவுகளாக வெளிப்படுகின்றன. வேல் போன்ற புருவம் விறால் மீன் வற்றலாகவும், மலர் போன்ற கண்கள் வழுவாகிய நீரைச் சுமந்தும், குமிழம் பூப் போன்ற மூக்கு சீயைச் சொரிந்தும் மாறிவிட்டன. முத்துப்பற்கள் சுரை விதையாகவும், அழகிய சிவந்த வாய் புண்ணாகவும், முலைகள் பை போலத் தொய்ந்தும், வாழைத் தண்டு துடைகள் தாழைத் தண்டு போல வற்றியும்.... என ஒவ்வொரு உறுப்பாக வருணித்து அவை இன்று வெறுக்கத்தக்கனவாக விவரிக்கின்றாள். புலால் நாறும் மனித உடலைச் சந்தனம், மலர், ஆடை, அணிகலன் என மறைத்து அதன் மீது ஆசை தோன்றச் செய்தது, முன்னோரின் வஞ்சகச் செயல் எனக் குற்றம் சாட்டுகின்றாள். இயற்கையின் அங்கமான மனித உடல்கள் மீதும், குறிப்பாகப் பெண்ணுடல் மீது சாத்தனார் வைக்கும் குற்றச்சாட்டுகள், அருவருப்பானவை. மறு உற்பத்தியில் ஈடுபடும் ஆற்றல் மிக்க பெண் முழுக்கக் குழந்தை, குடும்பம் எனப் போற்றி, எல்லோர் மீதும் அன்பு கொள்ளும் இயல்புடையவள். பெண்ணின் மனம் பற்றிய புரிதல் இல்லாமல், வெறும் உறுப்புகளின் தொகுதியாகக் கருதிப் போற்றும் ஆண் மேலாதிக்க மனநிலையின் வெளிப்பாடு, தூற்றுதலாகவும் வெளிப்பட்டுள்ளது.

பெண்ணுடல் பற்றிய இழிவான பிம்பத்தை மணிமேகலை என்ற பெண் மூலம் முன்வைப்பது நுண் அரசியல் சார்ந்தது. பூமியில் மனித இருப்பு என்பது முழுக்க உடலை மையமிட்டது. உடல்களின் கொண்டாட்டத்திற்குக் காரணமான புலன்களின் வழியே பெறும் இன்பங்களை மறுத்து, உடலை வகைப்படுத்துவதில் மதங்கள் முதலிடம் வகிக்கின்றன. எங்கோ தொலைவில் இருப்பதாகச் சொல்லப்படும் 'சொர்க்கம்' பற்றிய கற்பிதமும், இறைவன் பற்றிய புனைவுகளும் தொடர்ந்து சமூகத்தில் ஆதிக்கம் பெற உடல்களை வெறுப்பது தொடர்கின்றது. ஒவ்வொருவரின் உடல் குறித்த பிரக்ஞையைச் சிதைத்து, உடல்களைப் புறக்கணிப்பதற்கான மனநிலையை உருவாக்கிடப் பெண்ணுடல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கணிகை குலத்தில் பிறந்த மணிமேகலைக்கு முன்னுரிமை தரும் மனநிலையில் ஒட்டு மொத்தப் பெண்களையும் வெறும் உடல்களாகக் குறுக்கும் கேவலமும் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. மனித உடல் ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு விதமான வளர்ச்சியடைவதும் மாற்றமடைவதும் இயல்பானது. ஆனால் சாத்தனார் இளம் பெண்ணுடல் மூதாட்டியின் பெண்ணுடல் என எதிரிணைகள் மூலம் உடல்கள் மீது நடத்தும் அத்துமீறல்கள் அளவற்றவை.

பொதுவாகத் தமிழ் இலக்கிய மரபில் மேன்மையான அம்சங்களைப் படைப்பதும் அவற்றைப் பற்றிப் பேசுவதும் தான் முக்கியம் என்ற கருத்து பன்னெடுங்காலமாக நிலவுகிறது. எதைப் பேச வேண்டும் எதைப் பேசக் கூடாது என்ற கண்காணிப்பின் அரசியல் ஒவ்வொரு படைப்பாளரிடமும் நுட்பமாக வினையாற்றுகின்றது. சாத்தனாரைப் பொறுத்தவரையில் சமூகத்தில் விளிம்பு நிலையில் வாழ்கின்றவர்களையும் கதைவெளிக்குள் கொண்டுவர முயன்றுள்ளார். மணிமேகலை தனது தோழி சுதமதியுடன் மலர் பறிக்க மலர் வனம் செல்லும்போது, தெருவில் நிகழ்ந்திடும் காட்சிகள் ஒடுக்கப்பட்டோர் பற்றிய பேச்சுக்களை உருவாக்கும் வல்லமை பெற்றிருக்கின்றன. குடிகாரன், அரவாணி, மனப்பிறழ்வாளன் என மூவர் பற்றி விரியும் காட்சிகள், வேத்தியல், பொது வியல் எனப் பிரிவுகள் நிலவிய பண்டைத் தமிழிலக்கியப் பரப்பில் புதிய போக்கு முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

நிர்வாணமான தோற்றத்துடன், புழுதி படிந்த உடம்புடன் உண்ணாநோன்பிருக்கும் ஜைன முனிவர் வீதியில் நடந்து வருகின்றார். அப்பொழுது அவரைக் கண்ட குடிகாரன், வணங்கித் தனது சிற்றுரையைக் கேட்குமாறு வேண்டுகிறான்.

................

***அழுக்கு உடை யாக்கையில் புகுந்து நும்உயிர்***
***பட்டோர் போன்று உளம் வருந்தாது***
***இம்மையும் மறுமையும் இறுதியில் இன்பமும்***
***தன்வயின் தரூஉம் என் தலைமகன் உரைத்தது***
***கொலையும் உண்டோ, கொழுமடல் தெங்கின்***
***விளைபூந் தேறலில் மெய்த்தவத் தீரே!***
***உண்டு நெளிந்துஇவ் யோகத்து உறுபயன்***
***கண்டால் எம்மையும் கையுதிர்என கொண்ம்***
***(மணிமேகலை, மலர் வனம் புக்க காதை, பா. வரி: 94-102).***

அழுக்குச் செறிந்த உனது உடலிலுள்ள உயிர், காற்றுப் புகாத அறையினுள் நுழைந்தோர் அடையும் துன்பத்தைப் போல துயரமடைந்துள்ளது. அதன் வருத்தத்தைப் போக்கும் மருந்து என்னிடம் உள்ளது. மடல் செறிந்த தென்னையில் விளையும் கள்ளைக் குடித்தால் உம் உயிரின் வருத்தம் நீங்கும். இம்மை, மறுமை, வீடுபேறு ஆகிய இன்பங்களைத் தன் வயப்பட்டோருக்குக் கள் தரும். இவ்வினிய கள்ளில் கொலைத் தொழில் உண்டா? கள்ளைக் குடித்து தெளிந்து, பின்னர் இக்கள்ளைக் காட்டிலும் உம்முடைய தவநெறியில் பயனுடையதைக்

கண்டால், இக்கள்ளையும் என்னையும் பேசத் தகுதியற்றவை என விலக்கிவிடும் எனக் குடிகாரன் ஒருவன் ஜைன முனிவரிடம் விவாதிப்பது எளிதில் புறக்கணிக்கக்கூடியதல்ல. மதுவின்மூலம் உடலில் ஏற்படும் கிளர்ச்சியினால்பரவசமடையும்குடிகாரன், உடலை வருத்தி உண்ணாநோன்பு இருக்கும் ஜைன முனிவருக்குத் தனது பேச்சின் மூலம் வலியுறுத்த விரும்புவது, உடலின் மேன்மைதான். வெறுமனே பகடி செய்வது போலக் குடிகாரனின் பேச்சு இருப்பினும், ஜைன சமயம் கட்டமைக்கும் உடல் பற்றிய கருத்தாடலுக்கு எதிர்வினையாகவும் கருதமுடியும். மனப்பிறழ்வாளன் பற்றிய காட்சி நுட்பமான தகவல்களைப் பதிவாக்கியுள்ளது.

**ததர்வீழ்பு ஓடித்துக் கட்டிய உடையினன்**
**வெண்பலி சாந்தம் மெய்ம்முழுது உறீசி**
**பண்புஇல் கிளவி பலரொடும் உரைத்தாங்கு**
**அழூஉம் விழூஉம் சுழலலுஞ் சுழலும்**
**ஓடலும் ஓடும் ஒருசிறை ஒதுங்கி**
**(மணிமேகலை, மலர்வனம் புக்கக் காதை, பா.வரி: 107-122)**

அலரி பூக்களால் கட்டப்பட்ட மாலையை அணிந்திருந்த பித்தன், எருக்கம் மலர் மொட்டுகளைக் கோர்த்து மார்பில் தொங்க விட்டிருந்தான். கந்தல் துணியில் சுள்ளிகளைச் செருகியிருந்தான்; உடலில் திருநீறு, சந்தனம் பூசியிருந்தான்; பண்பற்ற சொற்களைப் பலரிடமும் கூறினான்; அழுதான், விழுந்தான், அரற்றினான், கூவினான், தொழுதான், சுற்றினான், சுழன்றான், ஓடுவான், ஒதுங்கி நிற்பான். மனம் பிறழ்ந்த நிலையில் தெருவினில் தன்னிச்சையாகச் செயல்படும் பித்தனின் செயல்களைக் கண்டு வருந்திய பலர் அவன் பின்னால் நின்றனர். ஒட்டுமொத்தச் சமூக அமைப்பில் பொது நியதியிலிருந்து மாறுபடுகின்றவனைப் 'பைத்தியம்' எனக் கேவலப்படுத்திப் புறவெளிக்குள் தள்ளிச் சிறுமைப்படுத்து வது பன்னெடுங்காலமாகத் தொடர்கின்றது என்பதற்கு இக்காட்சி, எடுத்துக்காட்டு.

பால் திரிந்த நிலையில் உடல் ஆணாகவும், மனம் பெண்ணாகவும் வாழ்கின்றவர் படும் மனவேதனைகள் அளவற்றவை. பால் அடிப்படையில் பெண்ணுடல்களைப் புறந்தள்ளி வெறும் போகப்பொருளாக நுகர்ந்திடும் ஆண் மேலாதிக்கச் சமூகத்தில் பால் திரிந்த உடல்கள் பற்றிய பேச்சுக்கே இடமில்லை. பேடி எனச் சாத்தனார் குறிப்பிடும் திருநங்கை பற்றிய பதிவுகள் குறிப்பிடத்தக்கன.

**கரியல் தாடி, மருள்படு பூங்குழல்**
**பவளச் செவ்வாய்த் தவள வாள்நகை**
**ஒள் அரி நெடுங்கண் வெள்ளிவெண் தோட்டு**
**கருங்காடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதல்**
**காந்தள் அம்செங்கை ஏந்துஇள வனமுலை**
**அகன்ற அல்குல் அம்நுண் மருங்குல்**
**இகந்த வட்டுடை எழுதுவரிக் கோலத்து**
**வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி**
**நீணிலம் அளந்தோன் மகன் முன்னாடிய**
**பேடிக் கோலத்துப் பேடு காண்டுநரும்**
**(மணிமேகலை, மலர் வனம் புக்கக் காதை, பா.வரி: 116-125)**

கரிய அழகிய கூந்தல், பவளம் போன்ற சிவந்த வாய், வெண்மையான பற்கள், செவ்வரி படரும் நீண்ட விழிகள், கரிய கொடி போன்ற வளைந்த புருவங்களின் மேல் வளைந்த பிறை நெற்றி, செங்காந்தள் மலர் போன்ற விரல்கள், ஏந்திய வனப்புடைய இளமையான முலைகள், அகன்ற அல்குல், மெலிந்த இடை, முழங்கால் வரை அணிந்த உடை, தோள், முலை ஆகியவற்றில் எழுதப்பட்ட வரிக்கீற்று.... எனப் பேடி பற்றிய அழகிய வருணனை முதன்முதலாக மணிமேகலையில் தான் இடம் பெற்றுள்ளது. "பேடிக் கூத்தைத் தெருவினில் பேடி ஆடினாள்" என்ற தகவல்மூலம் திருநங்கையர் ஆட்டக் கலையினும் சிறந்து விளங்கினர் என அறிய முடிகின்றது.

சமயப்பூசல் காரணமாக எதிர் கருத்துக்களைப் பதிவாக்கும் மனப்பான்மையுடைய சாத்தனார்,

பொதுச் சமூகத்திலிருந்து விலக்கப்பட்டிருக்கும் குடிகாரன், பித்தன், பேடி பற்றிய சமூக எதிர்வினைகளை நேர்மறையாகப் பதிவு செய்துள்ளார். உலகத்திலுள்ள எல்லா உயிர்களையும், சமமாகக் கருத வேண்டும், சக உயிர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும் என்ற புத்த சமயக் கருத்தின் அடிப்படையில் விளம்பு நிலையினர் பற்றிய பரிவுணர்வுடன், காப்பியத்தில் அவர்கள் இடம் பெற்றுள்ளனர்.

சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழும் இயல்புடைய சிலரின் இயல்புகளும் மணிமேகலையில் பதிவாகியுள்ளன. எப்பொழுதும் சுடுகாட்டில் தங்கியிருக்கின்றவரின் மனநிலை ஆய்விற்குரியது.

**சுடலை நோன்பிகள் ஓடியா உள்ளமொரு**
**மடைதீ உறுக்கும் வன்னி மன்றமும்**
**விரதயாக்கையர், உடைதலை தொகுத்தாங்கு**
**இருந்தொடர் படுக்கும் இரத்தி மன்றமும்**
**பிணம்தின் மாக்கள் நிணம்படு குழிசியில்**
**விருந்தாட்டு அயரும் வெள்ளிடை மன்றமும்**
**(மணிமேகலை, சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை, பா. வரி: 86-92)**

சுடுகாட்டில் நோன்பு இயற்றும் கபாலிகர், மண்டையோடுகளை மாலையாகத் தொகுத்து அணிந்துள்ள பைராகியர், பிணம் தின்னுகின்றவர் ஆகிய மூவரைப் பற்றிய குறிப்புகள் அன்றைய காலச்சூழலைப் பதிவாக்கியுள்ளன. பொதுவாக மக்கள் பயத்தின் காரணமாக வெறுத்து ஒதுக்கும் சுடுகாட்டிலே தங்கி நோன்பிருக்கும் கபாலிகர், பைராகி போன்றோரின் மனத்துணிவு, ஒருவகையில் பொதுப்புத்திக்கு விடப்பட்ட சவால். ஏதோ ஒருவிரதம் அல்லது தவத்தை முன்னிறுத்திச் சுடுகாட்டில் தங்கியிருப்பதும் மண்டையோடுகளை மாலையாக அணிவதும் பிணத்தைச் சமைத்து உண்பதும் விநோதமன்றி வேறு என்ன?

குடும்பத்திற்கு வெளியே பாலுறவு, முறை தவறிய பாலுறவு, வன்புணர்ச்சி முயற்சி போன்ற பாலியல் பிரச்சினைகளும் மணிமேகலையில் இடம்பெற்றுள்ளன. இளவரசனான உதயகுமாரன் கொலை செய்யப்பட்டதனால், அதற்கு ஒருவகையில் காரணமான மணிமேகலையைப் பழிவாங்கும் நோக்கில் அவனது தாயான இராசமாதேவி திட்டமிட்ட செயல் அதிர்ச்சியைத் தரக்கூடியது.

**கல்லா இளைஞன் ஒருவனைக் கூஉய்**
**வல்லாங்குச் செய்து மணிமேகலை தன்**
**இணைவளர் இளமுலை ஏந்து எழில், ஆகத்துப்**
**புணர்குறி செய்து பொருந்தனள் என்னும்**
**பான்மைகி கட்டுரை பலர்க்கு உரை என்றே**
**காணம் பலவும் கைந்நிறை கொடுப்ப**
**ஆங்கு அவன் சென்று அவ் ஆய்இழை இருந்த**
**(மணிமேகலை, துறைவிடு காதை, பா.வரி: 43-49).**

இராசமாதேவி கல்வியறிவு அற்ற இளைஞனை அழைத்து, மணிமேகலையை வன்புணர்ச்சி செய். அவளது இளமுலையில் புணர்குறி செய்துவிட்டு அதைப் பலரிடமும் கூறு என்று கூறி அவனுக்குக் கை நிறைப் பொற்காசுகள் கொடுத்தாள். அதையறிந்த மணிமேகலை ஆண் உருவெடுத்து அவனிடமிருந்து தப்பினாள். இளம் பெண் மீது பழி சொல்வதற்காக அவளை வன்புணர்ச்சி செய்வதற்குப் பணம் தந்து ஆளை ஏற்பாடு செய்யும் செயலை நாட்டின் அரசியே செய்வது, அன்றைய அதிகார அரசியலின் வெளிப்பாடு. ஆணும் பெண்ணும் விருப்பத்துடன் ஒத்திசைந்து வாழ்ந்த காதல் வாழ்க்கையை முன்னிறுத்திய சங்ககால வாழ்க்கை முழுக்க மாறிவிட்டதன் அடையாளம் தான் மணிமேகலை கதையில் இடம் பெற்றுள்ள பாலியல் வன்புணர்ச்சி முயற்சி.

பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நிகழ்ந்ததாக மணிமேகலை சொல்லும் கதை, அரசனின் கொடுங்கோன்மையை முன்னிறுத்தி விரிகின்றது.

**ஆள்பவர் கலக்குற மயங்கிய நல்நாட்டுக்**
**காருக மடந்தை கணவனும் கைவிட**
**ஈன்ற குழவியோடு தான்வே றாகி**
**மன்றுஊர் திசையோய் வரையாள் வார்வுழிப்**

***புதல்வன் தன்னைஓர் புரிதல் மார்பன்***
***பதியோர் அறியாப் பான்மையன் வளர்க்க***
***ஆங்குஅப் புதல்வன் அவள்திறம் அறியான்***
***தான் புணர்ந்து அறிந்து பின்னுயிர் நீத்ததும்***
***(மணிமேகலை, சிறைவிடு காதை, பா.வரி: 104-111)***

நாட்டை ஆண்ட மன்னனின் மோசமான ஆட்சியினால் நாட்டின் வளம் குன்றியது. அப்பொழுது காருக மடந்தை என்னும் பெண்ணை அவளது கணவன் கைவிட, அவள் தான் பெற்ற குழந்தையைப் பிரிந்து, விலைமகளாக வாழ்ந்து வந்தாள். அக்குழந்தையைப் பார்ப்பான் வளர்த்து வந்தான். அக்குழந்தை வளர்ந்து இளைஞன் ஆனபோது, அவ்விலைமகளிடம் விருப்பம்கொண்டு, அவளைத் தன் தாய் என்று அறியாமல், அவளுடன் கூடிப் புணர்ந்தான். பின்னர் அவளே தனது தாய் என அறிந்து தன்னையே மாய்த்துக்கொண்டான். மனிதர்களிடம் இயல்பாகத் தோன்றக்கூடிய காம உணர்வு எத்தகைய தீமையையும் தரக்கூடியது என்பதை இராசமாதேவிக்கு உணர்த்துவதற்காக மணிமேகலை சொன்ன அக்கதை, எதுவும் நடப்பதற்கான சாத்தியப்பாட்டினை உள்ளடக்கியுள்ளது. சமூகம் விலக்காகக் கருதும் செயல் நடைபெறுவதற்கான சாத்தியம் உண்டு என்பதைக் காருக மடந்தை கதை விளக்குகின்றது.

பார்ப்பனப் பெண்ணான சாலி, தனது கணவனைவிட்டு வேறு ஆணுடன் உறவு கொண்டு கருத்தரித்தாள். அவள் தனது முறையற்ற செயலுக்கான தண்டனைக்குப் பயந்து, குமரிக் கடலுக்குச் செல்லுகின்ற வழியில் பிறந்த குழந்தையைத் தோட்டத்தில் விட்டுச் சென்றாள். பசுவினால் பால் கொடுக்கப்பட்டு வளர்க்கப்பட்ட அக்குழந்தையை இளம்பூதி என்றும் பார்ப்பனர் தூக்கிச்சென்று வளர்த்து வந்தார். வேள்வியில் பலி கொடுப்பதற்காகப் பார்ப்பனர்களால் கட்டி வைக்கப்பட்டிருந்த பசுவைக் காப்பாற்றியதற்காக ஆபுத்திரனை அடித்து உதைத்தனர். மேலும் அவனைப் பசுவின் மகன் எனக் கேவலமாகத் திட்டுகின்றனர். அப்பொழுது ஆபுத்திரன் அசலன் பசுவுக்குப் பிறந்தவன், சிருங்கி மானுக்குப் பிறந்தவன், கேச கம்பளன் நரிக்குப் பிறந்தவன், இவர்கள் முனிவர்கள் எனில் ஆபுத்திரன் என்பதில் என்ன தவறு என்கிறான். மேலும் அவன் பார்ப்பனர் குலத்தின் ஆதித் தந்தையரான வசிட்டனும் அகத்தியனும் பிரமனுக்கும் பரத்தையாகிய திலோத்தமைக்கும் பிறந்தவர்கள் அல்லவா என்று கேள்வியெழுப்புகிறான். சாதிய ஏற்றத்தாழ்வு எனக் கற்பிதம் புனையும் வைதிக இந்து சமயத்தினை விமர்சிக்க புராணத்தை முன்னிறுத்தும் கேள்விகள் நுட்பமானவை.

மணிமேகலைக்குக் கிடைத்த அபூர்வமான அட்சய பாத்திரத்தில் முதன்முதலாக உணவு இடுவதற்கான தகுதி பெற்றவளாக ஆதிரை குறிப்பிடப்படுகிறாள். பத்தினிப் பெண்ணாக உணர்த்தப்படும் ஆதிரையின் கணவனான சாதுவன் அவளைக் கைவிட்டுக் கணிகையுடன் திரிந்து, சொத்து முழுவதையும் இழந்து விட்டான். எனவே அவன் பொருளீட்டுவதற்காக மரக்கலமேறிச் சென்ற போது, சூறாவளியில் சிக்கிக் கடலினுள் மூழ்கித் தீவில் கரையொதுங்கினான். தப்பிப் பிழைத்த சிலர் அதை அறியாமல், சாதுவன் இறந்ததாகக் கூறினர். அச்செய்தியைக் கேள்விப்பட்ட ஆதிரை சுடுகாட்டில் நெருப்பு மூட்டி, அதில் புகுந்தாள். நெருப்பு அவளைத் தீண்டவில்லை. பின்னர் கணவனுடன் சேர்ந்து வாழ்ந்தாள். மனைவியைப் புறக்கணித்து விட்டு விலைமகளுடன் சேர்ந்து சொத்தை அழித்த கணவனுக்காக உயிரைத் துறத்தல், கற்புடைய மகளிருக்கான இலக்கணம் என மணிமேகலை போதிப்பது பெண்ணிய நோக்கில் முரணானது. கணவன் கயவனாகவும், பொறுக்கியாகவும் இருந்தால்கூட, அவனையே எண்ணிக் காத்திருத்தலும், அவன் இறந்தை அறிந்தவுடனே தற்கொலை செய்து கொள்ளுதலும் பத்தினிப் பெண்ணின்

இலக்கணம் என்பது, பெண்ணை வெறும் உடலாகக் குறுக்கி, ஆணின் ஆளுகைக்குள் தொடர்ந்து தக்கவைப்பதற்கான தந்திரமாகும்.

அடுத்தவேளை சோற்றுக்காகப் பசியுடன் தவித்தவர்களின் உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகச் சாத்தனார் கண்டறிந்த மாயக்கருவியான 'அட்சய பாத்திரம்' மாந்திரிகத்தின் உச்சம். சக்கரவாளக் கோட்டத்தில் பசியால் வாடினோரும் ஆதரவற்றவர்களும் உணவுக்காகக் காத் திருக்கின்றனர் என்ற தகவல் அன்றைய காலகட்டத்தில் வறுமையில் துயருற்றவர் பற்றிய பதிவாகும். 'பசிப்பிணி என்னும் பாவி' எனக் குறிக்கும் சாத்தனார் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரே' எனப் பசியைத் தீர்க்கும் வழியைக் குறித்துள்ளார். மேலும்,

**ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்**
**மேற்றே உலகின் மெய்நெறி வாழ்க்கை**

என்று குறிப்பிடுவதிலிருந்து, பசிப்பிணியைப் போக்க இயலாதவரின் பசியைப் போக்குகின்றவரின் வழி நிற்பதே உலகின் உண்மைநெறியான வாழ்க்கை என அறிய முடிகின்றது. உலகத்து உயிர்கள்மீது இரக்கமும் கருணையும் கொள்ள வேண்டுமென்ற புத்தரின் போதனையைக் காப்பியப் போக்கில் பதிவாக்கியுள்ள சாத்தனார், "பசி" குறித்தும், அதைப் போக்குவதற்கான வழிமுறையைப் புனைவாகக் கண்டறிய முயன்றதும் அன்பினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

மணிமேகலை நூலின் இறுதியில் இடம் பெற்றுள்ள "சமயக் கணக்கர் தம் திறங்கேட்ட காதை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, பவத்திற மறுகெனப் பாவை நோயுற்ற காதை, ஆகியன காப்பியக் கதையோட்டத்துடன் இயைபுபடாமல், வெறுமனே புத்த சமயப் பிரச்சாரமாகவே உள்ளன.

புத்த சமய பிரச்சாரத்திற்காகக் கணிகை குலத்தில் பிறந்த மணிமேகலை என்ற பெண்ணைக் காப்பியத் தலைவியாக்கிப் புனையப்பட்டுள்ள மணிமேகலை காப்பியம், பண்டைத் தமிழர் வாழ்க்கையினைப் பெரிதும் முன்னிறுத்தவில்லை. பூமியில் மனித இருப்பினுக்கு ஆதாரமாக விளங்கும் உடல்களை வருத்துவதுடன், உடல்களைக் கேவலமாகக் கருதுவது, மதம் சார்ந்த கருத்தியல் பின்புலமுடையது. விளிம்பு நிலையினர், பசியால் துயருற்றவர் குறித்த பதிவுகளும், பசியைப் போக்கிட 'அட்சய பாத்திரம்' கண்டறிந்ததும் மணிமேகலைக் காப்பியத்தின் சிறப்பு அம்சங்கள். கதை விவரிப்பில் இடம் பெற்றுள்ள அளவுக்கதிகமான இயற்கையிறந்த சம்பவங்களும் கதைப் போக்கும் காரணமாக மணிமேகலை காப்பியத்தைச் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியெனக் கருத இயலவில்லை. ஒட்டுமொத்த நிலையில் 'மணிமேகலை' அசலான தமிழ்க் காப்பியமா என்ற கேள்வி தோன்றுகிறது.

## சான்றாதரம்

1. புலியூர்கேசிகன். மணிமேகலை. சென்னை, கௌரா பதிப்பகம், 2019.